**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

<u>அசல் வழக்கு எண்.161/2020</u>

**<u>DW1</u>**

| | | |
|---|---|---|
| பெயர். திரு.பொய்யாதப்பன் | த/பெ.திரு.நடேசன் | நாள்.13.02.2026 |

<u>பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>

தாவா சொத்தின் சர்வே எண்.217/9 என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 7 செண்ட் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. தாவா சொத்து ஆதியில் ஏகாம்பரத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஏகாம்பரத்திற்கு 1.பூமியப்பன், 2. வேலாயுதம். 3. கோவிந்தராஜ் மற்றும் மண்ணப்பெருமாள் என்ற 4 வாரிசுகள் என்றால் சரிதான். வேலாயுதம் இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் 4 பேரும் இறந்துவிட்டார்கள்.

2. ஏகாம்பரம் இறந்துவிட்டபிறகு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே அவரது வாரிசுகள் சொத்தை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் 7 செண்டில் மண்ணப்பெருமாளுக்கும் 3 செண்டும், கோவிந்தராஜிக்கும் 4 செண்டும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கோவிந்தராஜி என்பவர் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு வாரிசு இன்றி இறந்துவிட்டார், சர்வே எண்.217 ல் 11 செண்ட், 217/11 ல் 11 செண்ட், 217/12 ல் 6 செண்ட் ஆக மொத்தம் 24 செண்ட்டை சொத்தை மண்ணப்பெருமாள், பூமியப்பன், வேலாயுதம் ஆகியோர்கள் தலா 8 செண்டாக பிரித்துக்கொண்டார்கள்.

3. சர்வே எண்.217/9 ல் தென்பக்கம் கோவிந்தராஜிக்கு 4 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவருக்கு ஒதுக்கப்பட்ட 4 செண்டை வாதியின் தகப்பனாருக்கு கோவிந்தராஜ் கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. சர்வே எண்.217/9 ல் தென்புறம் 3 செண்டை மண்ணப்பெருமாள் வாதியின் தந்தைக்கு 14.12.1988 அன்று கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்தகிரையத்திற்கு பிறகு தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணத்தையும் வாதியின் தந்தை தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அவரது அனுபவத்தை அனுசரித்து அரசாங்கம் வாதியின் தந்தை பெயரில் பட்டா வழங்கியது என்றால் சரியல்ல.

4. அந்த பட்டாவின் அடிப்படையில் வாதியின் தந்தை 7 செண்ட் நிலத்தை வாதியின் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை வாதியின் பெயரில் பட்டா மாறிவிட்டது என்றால் சரிதான், ஆனால் அது தவறான பட்டா. நான் 1989 ல் மண்ணப்பெருமாளிடமிருந்து கிரையம் வாங்கிய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. என்னுடைய முதல் விசாரணையிலேயே தாவா சொத்துக்கம், பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் வாதிக்கு சம்பந்தம் இல்லை என குறிப்பிடுவதற்கு பதிலாக பிரதிவாதிக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் தந்தைக்கு 1988 ல் தாவா சொத்தை கிரையம் கொடுத்த பிறகு அதே சொத்தை எனக்கு கிரையம் கொடுக்க மண்ணப்பெருமாளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல

என்றால் சரியல்ல. 1988 ம் ஆண்டு வாதியின் தந்தைக்கு அவர் 3 செண்ட் கிரையம் கொடுத்துள்ளார் அதில் 3 செண்ட் தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன். வாதியின் பெயரில் அவரது தந்தை எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணம் செல்லத்தக்கது அல்ல என பரிகாரம் கேட்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த அனுபவமும், உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.N.Valliamma,
DM Cum JM
Cheyyur (FAC)